## சுருக்கம்

திருவண்ணாமலை மாவட்டம் – செங்கம், புதுப்பாளையம் பேரூராட்சி மற்றும் செங்கம் – புதுப்பாளையம் ஊராட்சி , ஒன்றியங்களைச் சார்ந்த 40 வழியோர ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டு குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்– நிர்வாக ஒப்புதல்– ஆணை வெளியிடப்படுகிறது.

---

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ.1) துறை

அரசாணை (நிலை) எண். 97 நாள். 15.06.09

படிக்கப்பட்டது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரின் கடிதம் கோ. செங்கம்/இநிபொ/ திமேபி/07, நாள் 20.1.2009.

---

ஆணை:

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் பேரூராட்சியில் 10 குடியிருப்புகளும், புதுப்பாளையம் பேரூராட்சியில் 4 குடியிருப்புகளும் உள்ளன என்றும், தற்போது செயலில் உள்ள நீராதாரங்கள் மூலம் செங்கம் பேரூராட்சியில் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 50 லிட்டர் வீதமும், புதுப்பாளையம் பேரூராட்சியில் 52 லிட்டர் வீதமும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது என்றும், மேலும் செங்கம் மற்றும் புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றியங்களில் முறையே 240 மற்றும் 205 குடியிருப்புகள் உள்ளன என்றும், அக்குடியிருப்புகளில் செங்கம் ஊராட்சியில் 29 குடியிருப்புகளும் புதுப்பாளையம் ஊராட்சியில் 40 குடியிருப்புகளும் பகுதி குடிநீர் வசதி பெற்றவை என தெரிவித்து, இப்பகுதி குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகள் அனைத்தும் நடப்பு நிதியாண்டின் நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்றுள்ளன என்றும் தெரிவித்துள்ளார். மேலும் இக்கூட்டுக் குடிநீர் திட்டத்தின் பிரதான நீர்கடத்து குழாய் வழியிலுள்ள குடியிருப்புகளில், செங்கம் ஒன்றியத்தைச் சேர்ந்த 22 மற்றும் புதுப்பாளையம் ஒன்றியத்தைச் சேர்ந்த 18 குடியிருப்புகளுக்கும் குடிநீர் மொத்த ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும் செங்கம் மற்றும் புதுப்பாளையம் பேரூராட்சிகளில் குடிநீர், நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் மற்றும் 40 ஊரக குடியிருப்புகளுக்கு 10 லிட்டர் கிடைக்கும் வகையில், சாத்தனூர் அணையை நீராதாரமாகக் கொண்டு ஒரு கூட்டுக் குடிநீர் மேம்பாட்டு திட்டம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

2. இக்கூட்டுக் குடிநீர் திட்டப் பகுதியில் உச்சகட்ட மக்கட்தொகை (2040–ஆம் ஆண்டில்) 71,278 எனவும், நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள குடிநீரின் அளவு பேரூராட்சிகளுக்கு 70 லிட்டர் வீதமும் ஊரகக் குடியிருப்புகளுக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 10 லிட்டர் வீதமும் வழங்கும் வகையில் 3.635 மில்லியன்

லிட்டர் தேவைப்படும் என கணக்கிடப்பட்டுள்ளதாகவும் தற்போது செயலிலுள்ள நீராதாரங்களிலிருந்து கிடைக்கும் நீர் 1.842 மில்லியன் லிட்டர் எனவும், மிகுதி குடிநீர் தேவை 10 விழுக்காடு குடிநீர் குழாய் வழி சேதாரத்தையும் சேர்த்து 1.977 மில்லியன் லிட்டர் எனவும் கணக்கிடப்பட்டுள்ளதாகவும், மேற்படி குடிநீர் உச்ச ஆண்டு தேவையின்படி, போயம்பள்ளி கிராமம் அருகே சாத்தனூர் அணையிலிருந்து, நாளொன்றுக்கு 2.00 மில்லியன் லிட்டர் நீரெடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. மேற்கண்ட திட்டத்திற்கு தலைமை அலுவலக தொழில் நுட்பக்குழு 30.10.08 அன்று நடைபெற்ற கூட்டத்தில் ஒப்புதல் அளித்துள்ளது என்றும், இதற்கான திட்ட மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் பொதுப்பணித்துறையின் 2008-09 வருட விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், இத்திட்டம் முடிவுற்றதும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். இத்திட்டத்திற்கான திட்ட மதிப்பீடு கீழ்க்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

| | | |
|---|---|---|
| திட்ட அமைப்புச்செலவு | – | ரூ8.88 கோடி |
| ஆண்டு பராமரிப்புச் செலவு | – | ரூ.24.50 இலட்சம் |
| தனி நபர் திட்டச் செலவு | – | ரூ.1566/- |
| 1000 லிட்டர் குடிநீர் உற்பத்திச் செலவு | – | ரூ.21.16 |

இத்திட்டத்தினை பேரூராட்சிகளில் குறைந்த பட்ச தேவை திட்டத்தின் (80 விழுக்காடு அரசு மான்யம் 20 விழுக்காடு பொது மக்கள்/பேரூராட்சி பங்களிப்பு) கீழ் செயல்படுத்த பேரூராட்சிகளின் ஆணையர் இசைவளித்துள்ளதாகவும், திட்ட மதிப்பீட்டில், 20 விழுக்காடு பங்களிப்பு செலுத்துவதற்கு பேரூராட்சிகள் தமது தீர்மானங்கள் எண் 204 நாள் 31.10.2008 மற்றும் 106 நாள் 31.10.2008ல் ஒப்புதல் அளித்துள்ளன என்றும், ஊரக குடியிருப்புகளுக்கு குறைந்த பட்ச தேவை திட்டத்தின் கீழ், 100 விழுக்காடு அரசு மான்யத்துடன் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார். மேற்கண்ட செயற்குறிப்பிற்கு 12.1.2009 அன்று நிறைவேற்றப்பட்ட வாரியத் தீர்மான எண்.2.6-ல் வாரிய இயக்குநர் குழு பரிந்துரை செய்துள்ளது.

4. வாரிய தீர்மானத்தின்படி, திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள செங்கம், புதுப்பாளையம், பேரூராட்சிகள் மற்றும் செங்கம், புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 40 வழியோர ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டு குடிநீர் மேம்பாட்டு திட்டத்தின், அமைப்புச் செலவு ரூ.8.88 கோடி எனவும், ஆண்டு பராமரிப்புச் செலவு ரூ.24.50 இலட்சம் எனவும், தனி நபர் திட்டச் செலவு ரூ.1566/- மற்றும் 1000 லிட்டர் குடிநீர் உற்பத்திச் செலவு ரூ 21.16 ஆகவும், இத்திட்டத்தை பேரூராட்சிகளுக்கு குறைந்த பட்ச தேவை திட்டத்தின் கீழ், 80 விழுக்காடு அரசு மான்யம் (ரூ.593.12 இலட்சங்கள்) மற்றும் 20 விழுக்காடு பொது மக்கள்/ பேரூராட்சி பங்களிப்புடனும் (ரூ.148.28 இலட்சங்கள்) மற்றும் ஊரக குடியிருப்புகளுக்கு குறைந்த பட்ச தேவை திட்டத்தின் கீழ், 100 விழுக்காடு (ரூ.146.60 இலட்சங்கள்) அரசு மான்யம் என்ற வகையில் இத்திட்டத்தினை கீழ்க்காணும் விகிதாச்சார

பங்களிப்புடன் செயல்படுத்த கோரும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரின் கருத்துருவினை ஏற்று நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

| விவரம் | செங்கம் பேரூராட்சி | புதுப்பாளையம் பேரூராட்சி | ஊரக குடியிருப்புகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| அமைப்புச் செலவு | ரூ. இலட்சங்களில் | | | |
| குறைந்த பட்ச தேவை திட்டத்தின் கீழ் அரசு மான்யம் | 401.12 | 192.00 | 146.60 | 739.72 |
| பொது மக்கள் பேரூராட்சி பங்களிப்பு | 100.28 | 48.00 | - | 148.28 |
| மொத்தம் | 501.40 | 240.00 | 146.60 | 888.00 |
| ஆண்டு பராமரிப்புச் செலவு | 14.02 | 5.68 | 4.80 | 24.50 |

5. இவ்வாணை நிதித்துறையின் 6.3.2009 நாளிட்ட அ.சா.எண்.11405/நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் / 09-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை-5.
பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை-108.
ஊரகவளர்ச்சி ஆணையர், பனகல்கட்டிடம், சென்னை-15.
மாநில கணக்காயர், சென்னை-18.
மாவட்ட ஆட்சியர், திருவண்ணாமலை மாவட்டம்.
சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள்
(ஊரக வளர்ச்சி ஆணையர் (ம) பேரூராட்சி ஆணையர் மூலமாக
நிதி (நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல்) துறை
நகல்:மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை -9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.ந.2) துறை, சென்னை-9

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

15/6/09

பிரிவு அலுவலர்.